**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.76/2017 தேதி-08.04.2025

(P.W.2) - மேரி ஞான புஷ்பம்

குறுக்கு விசாரணை

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் நந்தன்விளையில் வசிக்றேன். நான் எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் 1974 -ல் இருந்து அங்கு வசிக்கிறேன். எனது சொந்த ஊர் ஆலன்விளை ஆகும். என் பட்டிகை சொத்திலிருந்து ஆலன்விளை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 9.81 செண்ட் ஆகும். இந்த வழக்கில் எத்தனை பட்டிகை சொத்து இருக்கிறது என்றால் 2 ஆகும். ஏ-பட்டிகை சொத்து எவ்வளவு அளவு என்று 8.1 செண்ட். பி-பட்டிகை சொத்து எவ்வளவு அளவு என்றால் ஏ-பட்டிகை சொத்து எவ்வளவோ அவ்வளவு உள்ளது. ஏ-பட்டிகை சொத்து பி-பட்டிகை சொத்து யாருடையது என்றால் கமலம் உடையது. ஏ-பட்டிகை சொத்தின் பழைய எண் தெரியாது. இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதியின் சொத்தை வாதி அளவீடு செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கு விவரத்தை எனக்கு யார் கூறியது என்றால் அளவீடு செய்யும் போது நான் அங்கு இருந்தேன். அளவீடு செய்வதற்கு சர்வேயரை நான் தான் கண்டன்விளையில் இருந்து கூட்டிவந்தேன். பட்டிகை சொத்து என்று அளவீடு செய்தேன் என்றால் தேதி தெரியவில்லை. முதல் பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் வாதியின் வீடு உள்ளது. மேற்கு பக்கம் பிரதிவாதியின் வீடு உள்ளது. வடக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தெற்கு பக்கம் கமலத்தின் சொத்து உள்ளது. பி-பட்டிகை சொத்தின் கிழக்கு வாதியின் வீடு உள்ளது. மேற்கு பக்கம் யாருடையது என்று தெரியாது. வடக்கு பக்கம் விளையாக உள்ளது. தெற்கு பக்கமும் விளைதான் உள்ளது. நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை எனக்கு எதுவும் வரவில்லை. பின்பு எதற்காக நீதிமன்றம் வந்தேன்

என்றால் என் சகோதரி பிரதிவாதி சொல்லி வந்தேன். முதல் விசாரணையின் சங்கதிகளை எனக்கு யார் சொல்லி தந்தார்கள் என்றால் நான் தான் சொன்னேன். இந்த வழக்கு பட்டிகை சொத்து முதலில் ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் கமலம். கமலத்திற்கு எவ்வளவு இடம் சொந்தம் என்றால் 1 ஏக்கர் இடம் உள்ளது. பிரதிவாதி பெயர் என்ன என்றால் ஆக்னஸ் ஜெனட். பிரதிவாதி எங்கு வசித்து வருகிறார் என்றால் திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார்.

3. வாதி எங்கு வசித்து வருகிறார் என்றால் கருங்கல் நடுத்தேரியில் வசித்து வருகிறார். பட்டிகை சொத்து விலைக்கு இருப்பதாக வாதிதான் பிரதிவாக்கு சொன்னார் என்றால் சரிதான். பிரதிவாதியின் சம்மதத்தின் அடிப்படையில் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வாதியின் சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் ஒரே கண்டமாக உள்ளது. வாதியும் பிரதிவாதியும் ஒரே தேதியில்தான் கிரைய ஆவணம் Ex.A1 and B1 -யை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நான் வாதி மற்றும் பிரதிவாதி ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பத்திரம் பதிவு செய்தது எனக்கு தெரியும் ஆனால் வாசித்து பார்த்தது இல்லை. பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் கருங்கல், குளச்சல் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டில் இருந்து வாதி மற்றும் பிரதிவாதி இடத்திற்கு உண்டான வழிப்பாதை எவ்வளவு என்றால் 1 சென்ட் என்று சொன்னார்கள் ஆனால் 2.108 ஆகும். இந்த 2.108 சொத்திற்கு முள்வேலியோ எல்லை கற்களோ இல்லை என்றால் சரிதான். ஏ-பி-பட்டிகை சொத்தின் தென்பகுதி காம்பவுண்ட் சுவர் ஆகும். பிரதிவாதியின் சொத்தில் வீடு உள்ளது.

4. அந்த வீடு கட்டி எவ்வளவு ஆண்டு ஆகிறது ஆனால் தெரியாது. பஞ்சாயத்தில் Plan Approval வாங்கி தான் வீடு வைத்தார்கள் என்றால் சரிதான். பி-பட்கை சொத்தின் வழிப்பாதை காட்டிதான் Plan Approval வாங்கினார்கள் என்றால் தெரியாது. பிரதிவாதியாகிய எனது சகோதரியின் வீட்டிற்கு ஆதியில் பி-பட்டிகை சொத்தின் வழியாகதான் சமாதனமாக இருக்கும் போது சென்றேன். பி-பட்டிகை சொத்து பத்திரத்தில் Ex.A1 and B1 தனித்தனியாக சொல்லியிருந்தால் ஒரே கண்டமாக தான் உள்ளது. பி-பட்டிகை சொத்து எனது சகோதரி இருவரின் வீட்டை தொட்டு உள்ளது என்றால் சரிதான். பி-பட்டிகை சொத்தின் முகப்பில் ஒரு ஆர்ச் உள்ளது எனக்கு தெரியாது. பட்டிகை சொத்தை நான் கடைசியாக என்று பார்த்தேன் என்றால்

பிரதிவாதியின் கிரகபிரவேசத்தில் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் Ex.C4 புகைப்படத்தில் ஒரு ஆர்ச் உள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. அந்த ஆர்ச் வாதி 1998-ல் கட்டப்பட்டதாக சொல்லியிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி-பட்டிகை சொத்தின் வழியாகத்தான் வாதியின் வீட்டிற்கு மின்-இணைப்பு செல்கிறது என்றால் எந்த வழியாக செல்கிறது என்றால் தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் என்னுடைய சகோதரிதான்.

5. வாதியின் கார் பி-பட்டிகை சொத்தின் வழியாகதான் செல்கிறது என்றால் எனக்கு தெரியாது. பி-பட்டிகை சொத்தின் தெற்கு பகுதி இருக்கும் காம்பவுண்ட் சுவரையொட்டி காண்கீரேடால் ஆன Flower Box உள்ளது என்றால் தெரியாது.அந்த Flower Box ல் தற்போதும் Flower பூத்திருந்தது என்றால் எனக்கு தெரியாது. பி-பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் காம்பவுண்ட் சுவர் உள்ளது. பி-பட்டிகையின் வழிப்பாதைக்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் வாதியின் வீடு உள்ளது. பி-பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது. வாதியின் வீட்டிற்கு செல்வதற்கு பி-பட்டிகை சொத்தை தவிர வேறு வழி இல்லை என்றால் தற்போது வழி வாங்கப்பட்டிருக்கிறது பி-பட்டிகை சொத்து வழியாகவும் செல்வது உண்டு. பி-பட்டிகை சொத்தின் வழிப்பாதையில் மரங்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதியும் இந்த பிரச்சனை ஏற்பட்டத்திற்கு பின்பு யாருக்காவது புகார் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் தாலுக் சர்வேயர் மூலம் அளப்பதற்கு மனு செய்யப்பட்டிருப்பதாக சொல்லி இருக்கிறது என்றால் சரிதான். என்று பணம் கட்டியது ரசீது வாங்கியது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாலுக் சர்வேயர் அளவீடு செய்ய வந்தார்களா என்றால் வரவில்லை அதற்கு முன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

6. எனது முதல் விசாரணைக்கு நான் சென்று இருப்பதாக நான் சொல்லியிருக்கிறேன் இந்த மனு விசாரணை முடித்து வைக்கப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியும். அந்த விசாராணைக்கு நான் சென்றேன் என்றால் சென்றேன். நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் இடத்தை பார்வையிடுவதற்கும், அளவீடு செய்ய வந்தார்களாக என்றால் வந்ததாக சொன்னார்கள். என்னுடைய சகோதரி பிரதிவாதி

ஆணையர் வரும் போது ஆணையரிடம் மனு ஏதாவது கொடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்திற்கு செல்வதற்கு இந்த பி-பட்டிகை சொத்து ஒரே வழிதான் இருக்கிறது என்றால் இல்லை. எனது சகோதரி பிரதிவாதி பொய் சாட்சி சொல்ல சொல்லி தான் நான் இங்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வாதி, பிரதிவாதிகளின் சம்மதத்தின் அடிப்படையில்தான் இருவருக்கும் பி-பட்டிகை சொத்தின் அடிப்படையில்தான் அவரவர் சொத்திற்கு சென்று வருவதற்காக முதலில் இதுதான் வழிப்பாதையாக இருந்தது தற்போது அதில் பிரச்சனை ஏற்ப்பட்டதால் தற்போது வேறு மாற்றுப்பாதை பிரதிவாதியான ஆக்னஸ் ஜெனட் வாங்கிவிட்டனர்.

(பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்)